4. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினையை எடுத்துக் கொள்ளாதது குறித்து.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவன ஈர்ப்புத் தீர்மானம் வந்து முடிந்து விட்டது, வேறு அலுவலுக்குச் சென்றாகிவிட்டது, போசாமல் உட்காருங்கள். . . .

திரு. க. சுப்பு : கவன ஈர்ப்புத் தீர்மானம் முடிந்ததும் நீங்கள் என்னைக் கூப்பிடுவீர்கள் என்று நினைத்திருந்தேன். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் மன்றத்திலே கேள்வி நேரம் முடிந்ததும் உரிமை மீறல் பிரச்னையைத்தான் முதன் முதலாக எழுப்பியிருக்க வேண்டும், நான் கவன ஈர்ப்புத் தீர்மானமும் எடுத்துக்கொண்டு, இன்னொரு அலுவலுக்கும் சென்று விட்டேன். . .

திரு. க. சுப்பு : நீங்கள் கவன ஈர்ப்பு முடிந்தவுடன் என்னை கேட்பீர்கள் என்று நினைத்தேன். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் கேட்பதாக இல்லை; நீங்கள் என்னைக் கட்டாயப்படுத்த முடியாது.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர், அமைச்சரும் படித்துக் கொண்டே இருக்கிறார், நீங்களும் அனுமதிக்க மாட்டேன் என்கிறீர்கள், இது சரியல்ல, சட்டமன்றமே நடக்க முடியாமல் போய்விடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி எல்லாம் திரு. சுப்பு அவர்கள் பேசக்கூடாது. சட்டசபை நடக்காது என்று சொல்வதை வாபஸ் வாங்க வேண்டும்

திரு. க. சுப்பு : சரி வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். என்னை பேச அனுமதிக்க வேண்டும், போன தடவை என்ன சொன்னீர்கள்? அடுத்த மீட்டிங்கில் எடுக்கிறேன் என்று சொன்னீர்கள்.

1979 நவம்பர் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் முடியாது, நான் அதை எடுக்கவே இல்லை, உட்காருங்கள்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்கள் ஒன்று சொல்ல அனுமதிக்க வேண்டும். சபை நடைமுறைப்படி அடுத்த பிரச்னைகளைப் பற்றி நீங்கள் தான் அறிவிக்க வேண்டும், நீங்கள் அறிவிக்காமல், அவர் எழுப்பவில்லை என்று சொல்கிறீர்களே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து திரு. சாதிக்பாட்சா அவர்கள் பேரவைத் தலைவர் அதை அனுமதிக்கிறாரா இல்லையா என்பதைப் பார்த்துவிட்டுப் பேச வேண்டும். நான் அதை இன்று எடுப்பதாக இல்லை. அதனால் நான் அடுத்த அலுவலை எடுத்துக் கொண்டேன். திரு. சுப்பு அவர்கள் தான் நான் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வதற்கு முன்பு எழுப்பியிருக்க வேண்டும். கேள்வி நேரம் முடிந்தவுடன் எழுப்ப வேண்டிய பிரச்னை அது. . . . .

* **திரு. க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு உதவி செய்வதற்காகச் சொல்கிறேன். நீங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்த உடனேயே தான், இதை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்ல முடியுமே தவிர, நீங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப் போகிறீர்கள் என்பது எங்களுக்கு எப்படித் தெரியும்; நீங்களும் சொல்லவில்லை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எப்படிச் சொல்ல முடியும்? கேள்வி நேரம் முடிந்தது என்று அறிவித்த பிறகு, உரிமைப் பிரச்னையை கொடுத்தவர்கள் என்னவாயிற்று என்று கேட்க வேண்டும். அப்படிக் கேட்கிற முறை கையாளப்படுகிறது. நான் அடுத்த அலுவலுக்குச் சென்று விட்டேன். நான் அந்தப் பிரச்னையை இன்றைக்கு எடுப்பதாக இல்லை.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அவையிலே அதற்கான நேரம் கிடையாது. கேள்வி நேரம் முடிந்ததும், தாங்கள் இயல்பாக அதன் தொடர்பாக கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு சென்று விட்டீர்கள். பிறகுதான் தெரிந்தது எங்களுக்கே அது கவன ஈர்ப்புத் தீர்மானம் என்று, நீங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளப் போவதாகக் கூடிச் சொல்லவில்லை. அந்தப் பிரச்னை முடிந்தவுடன் எழுப்பலாம் என்று திரு. சுப்பு அவர்களும் இருந்து விட்டார். அந்தப் பிரச்னை அவ்வளவு முக்கியமானது அல்ல என்று நீங்கள் நினைக்கலாம். அது வேறு என்றாலும் உரிமைப் பிரச்சினையைக் கொடுத்துள்ள உறுப்பினர் அதைப் பற்றி இப்பொழுது கேட்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரம் முடிந்தவுடன், தாம் கொடுத்தப் பிரச்னை என்னவாயிற்று என்று கேட்டிருக்க வேண்டும். அதை அவர்தான் எழுப்பியிருக்க வேண்டும், கேள்வி நேரம் முடிந்த பிறகு, நான் வேறு அலுவலுக்குப் போன பிறகு, இப்போது உரிமை பிரச்னை எழுப்ப அனுமதிப்பதற்கு விதிகளில் எங்கே இருக்கிறது என்று சொல்லுங்கள் ஏற்றுக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன்: கேள்வி நேரம் முடிந்த பிறகு நீங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு இயல்பாகச் சென்று விட்டீர்கள். சென்றதற்குப் பிறகுதான் எங்களுக்கே தெரியும் அது கவன ஈர்ப்புத் தீர்மானம் என்று. கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொண்டிருப்பதாக நீங்கள் சொல்லக்கூட இல்லை. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவர் எனக்கு வழிகாட்ட வேண்டுமே தவிர இப்படிப் பேசக் கூடாது. கேள்வி நேரம் முடிந்த பிறகு முதலில் எடுத்துக்கொள்ள வேண்டியது உரிமை மீறல் பிரச்னை தான். ஆனால், அவர் கொடுத்த உரிமை மீறல் பிரச்னையை எடுத்துக் கொள்வது பற்றி நான் இன்னும் முடிவெடுக்கவில்லை. அதைப் பற்றி என் அறைக்கு வந்து என்னவாயிற்று என்று கேட்டிருக்கலாம், அல்லது இங்கேயே கூட நான் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வதற்கு முன்னதாகக் கேட்டிருக்கலாம், இன்னொரு அலுவலுக்குச் சென்று விட்ட பிறகு இப்போது எழுப்ப முடியாது. திரு. சுப்பு, அவையில் பேசுகிறபோது,

(முற்பகல் 10-10)

முறையோடு பேச வேண்டும். "முடியாது", "நடக்காது", என்றெல்லாம் அவர் சொன்னால் அதற்கெல்லாம் அஞ்சுபவன் அல்ல நான். இந்த ஆசனத்திற்கு நான் மரியாதை தந்தாக வேண்டும். ஒன்றை வலியுறுத்துவது என்றால் முறையோடு வலியுறுத்துங்கள். விதிகளைக் காட்டி வலியுறுத்துங்கள். என்னைப் பயமுறுத்தாதீர்கள். திரு. சுப்புவின் போக்கு அப்படித்தானிருக்கிறது. இந்த அவை நடக்காது என்று சொன்னால் என்ன அர்த்தம்? அவர் ஒருவருக்கு மட்டும் தான் இந்த அவையா?

திரு. க. சுப்பு: சபாநாயகர், சபாநாயகராக நடந்துகொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்கா சொல்லித் தருகிறீர்கள்? என்னிடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

1979 நவம்பர் 2]

திரு. க. அன்பழகன்: இது தனிப்பட்ட பேச்சு வார்த்தைகளால் வந்து விட்டதே தவிர வேறு விதமாகக் கருதிக் கொள்ளக் கூடாது. ஒரு உரிமைப் பிரச்னை தங்களிடம் ஏற்கனவே எழுதித் தரப்பட்டிருக்கிறது. அதை எடுத்துக் கொள்வதற்கும், அல்லது எடுத்துக் கொள்ளாமல் இருப்பதற்கும் தங்களுக்கு முழு உரிமை உண்டு. தாங்கள் எடுத்துக் கொள்வதற்கு மறுத்தால் அதைக் கண்டிப்பதற்கு என்னென்ன நியாயம் கூற வேண்டுமோ, அதைச் செய்வது எங்கள் உரிமை. அதற்கிடையில் தாங்கள் கேள்வி நேரம் முடிந்தவுடன் இயல்பாக உரிமைப் பிரச்னையை எடுத்துக் கொண்டிருந்தால் அதை அறிவித்திருப்பீர்கள். அதை அறிவிக்காமல் அடுத்த பிரச்னைக்குப் போய்விட்ட காரணத்தால் அந்தப் பிரச்னை முடிந்தவுடன் திரு. சுப்பு தம் பிரச்னையை எழுப்புகிறார். மேலும் சேம்பரில் கேட்டாகிவிட்டது. நேரில் பேசப்பட்டு விட்டது. தாங்கள் இல்லை என்று சொல்லவில்லை. அப்பிரச்னை தங்கள் பரிசிலனையில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். அவர் அதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் பரிசிலனையில் வைத்திருக்கிறேன் என்றால் அது இன்றைக்கே என்று பொருள் அல்ல.

திரு. க. அன்பழகன்: இன்றைக்கில்லாவிட்டாலும் நாளைக்குக் காலை எடுத்துக் கொள்வதாகச் சொல்லுங்கள். அல்லது என்றைக்கு எடுத்துக் கொள்ள இருக்கிறீர்கள் என்று சொல்லுங்கள். இல்லை என்றால், நாங்கள் இந்த அவையில் இருக்கத் தயாராயில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் என் கடமையைச் செய்கிறேன். தாங்கள் பேசுகிறபோது முறையோடு, விதிகள்படி இதைப் பற்றிப் பேசுகிறீர்கள். மற்றவர்கள் பேசுகிறபோது, எடுத்தேயாக வேண்டும், இந்த அவை நடக்காது என்றெல்லாம் சொல்வது சரியல்ல.

திரு. க. அன்பழகன்: அதற்கு வருத்தம் தெரிவிக்கிறேன். நாங்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்த அவை நடக்கும். நாங்கள் இருந்து தான் தீர வேண்டும் என்ற கட்டாயம் இந்த அவையில் உள்ளவர்களுக்கு இல்லை என்பது எனக்குத் தெரியும். தயவுசெய்து தாங்கள் அந்தப் பிரச்னையை நாளைய தினம் கேள்வி நேரம் முடிந்தவுடன் எடுத்துக்கொள்வதாக இருந்தால் அப்படி அறிவியுங்கள். அப்படி அறிவிக்க மறுப்பதால் இந்தப் பிரச்னையை தாங்கள் வேண்டுமென்றே தள்ளி வைக்கிற காரணத்தினால் நாங்கள் இந்த அவையிலிருந்து வெளியேறுகிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்பு செய்தனர்.)